## கோவையில் ‘சர்வதேச ஜவுளித் தொழில் மாநாடு – 360’ தொடங்கியது:

# நெசவுத் துறை வட்டி மானியத் திட்ட வழிகாட்டுதல்களில் தேவையான மாற்றங்களை தமிழ்நாடு அரசு செய்யும்!

## கோவை மாநாட்டுக் கருத்தரங்கில் பங்கேற்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**கோவை, ஜன.30-**

**கோவை கொடிசியா வளாகத்தில், `சர்வதேச ஜவுளி தொழில் மாநாடு - 360, நேற்று (ஜனவரி 29) தொடங்கி இரண்டு நாள் நடைபெறுகிறது. இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு வாழ்த்திப் பேசினார்.**

**அப்போது அவர், ``இந்தியாவுக்கு தமிழ்நாட்டின் நெசவுத் துறை அளிக்கும் பங்களிப்பு, மிகப் பெரியது, நிலையானது. இந்தியாவின் நெசவுத்தொழில் வணிகத்தில், 33 சதவிகித பங்களிப்பை, தமிழ்நாடு வழங்குகிறது. தமிழ்நாடு அரசு 6 சதவிகித வட்டி மானியத் திட்ட வழிகாட்டுதல்களில் தேவையான மாற்றங்களைச் செய்யும். இதனால், நூற்புக்கு முந்தைய மற்றும் நூற்புக்கு பிந்தைய எந்திரங்களுக்கும் இச்சலுகை விரிவாக்கப்படும்” என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:**

அனைவருக்கும் காலை வணக்கம்.

இந்தியாவில் முதன்முறையாக நடைபெறும் `சர்வதேச நெசவு உச்சி மாநாடு-360’ என்ற இந்நிகழ்வில் பங்கேற்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்நாடு அரசுடன் இணைந்து, இந்தியத் தொழில்துறை சங்கம் (சி.ஐ.ஐ.), தென்னிந்திய ஆலை உரிமையாளர்கள் சங்கம் (சி.மா), திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம் (டி.இ.ஏ.) ஆகிய பல தொழில் துறை அமைப்புகளின் ஒத்துழைப்பால், இந்நிகழ்ச்சி சாத்தியப்பட்டுள்ளது.

### துடிப்புமிக்க நெசவுத் துறை

`தென்னிந்தியாவின் மான்செஸ்டர்’ எனப் போற்றப்படும் கோயம்புத்தூர், தமிழ்நாட்டின் துடிப்புமிக்க நெசவுத் துறையின் புதுமை, தொழில்சார் சிறப்பு, தொழில் முனை உணர்வு ஆகியவற்றை அழகுற பிரதிபலிக்கிறது. இந்த சர்வதேச மாநாடு, தமிழ்நாட்டை `இந்தியாவின் நெசவுப் பூங்கா’ என்று அழைக்கப்படும் நிலையை மேலும் உறுதிப்படுத்தும்.

நமது மிகப் பெரிய வலிமை, முழுமையான நெசவு சூழலமைப்புதான். நூலிழையிலிருந்து ஆடை வரை அனைத்தையும் நாம் உருவாக்கித் தருகிறோம். கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, கரூர், சேலம், சென்னை ஆகிய மாநகரங்களில் செயல்பட்டு வரும் நமது முக்கிய நெசவு மையங்கள் உலக அளவில் புகழ்பெற்றவைகளாக மாறியுள்ளன.

சமீபகாலமாக மதுரை, திண்டுக்கல், விருதுநகர் ஆகியவை இணைந்து நூற்பு, நெய்தல், செய்முறை, ஆடை உற்பத்தி, மதிப்புக்கூட்டுதல் ஆகியவை நெசவு பொருட்களுக்கான முக்கிய வளர்ச்சிப் பாதைகளாக உருவெடுத்து வருகின்றன. இந்த மையங்கள் தரத்திலும் புதுமையிலும் முன்மாதிரியாகத் திகழ்கின்றன.

### 33 சதவிகிதம் பங்களிப்பு

இந்தியாவுக்கு தமிழ்நாட்டின் நெசவுத் துறை அளிக்கும் பங்களிப்பு, மிகப் பெரியது, நிலையானது. இந்தியாவின் நெசவு வணிகத்தில், 33 சதவிகிதம் பங்களிப்பை தமிழ்நாடு வழங்குகிறது. நூல் உற்பத்தித் திறனில் 46 சதவிகிதம், பஞ்சு துணி நெய்தல் திறனில், 70 சதவிகிதம் நம்மிடம் உள்ளது. மிக முக்கியமாக, தமிழ்நாட்டு நெசவுத் துறை முப்பது லட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு வாழ்வாதாரம் அளிக்கிறது. இது இந்தியாவின் மொத்த நெசவு வேலைவாய்ப்பில் சுமார் 28 சதவிகிதம். குறிப்பாக, இந்தியாவின் தொழிற்சாலைகளில் பணியாற்றும் பெண்களில் 42 சதவிகிதம் தமிழ்நாட்டில் பணியாற்றுகின்றனர்.

இது அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கும் பெண்கள் மேம்பாடுக்கும் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கும் உறுதிப்பாட்டை வெளிப்படுத்துகிறது. பல்வேறு சீர்திருத்தங்கள் மற்றும் அரசின் ஆதரவால், தமிழ்நாடு உலக நெசவுச்சந்தையில் வெறும் போட்டியாளராக மட்டுமல்லாமல், மற்றவர்கள் பின்பற்ற வேண்டிய தரங்களை அமைத்துக் கொடுக்கும் நிலையையும் அடைந்துள்ளது.

### ஒரு டிரில்லியன் டாலர்

மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில், தமிழ்நாடு ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற கனவை நோக்கி பயணிக்கிறது. இதில் நெசவுத் துறை எப்போதும் முதன்மைத் தூணாகவே இருக்கும். மதிப்புச் சங்கிலியை உயர்த்துதல், புதிய தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்ளுதல், உலகளாவிய விரிவாக்கம் ஆகியவற்றால் நமது தொழில்கள் பெரும் வளர்ச்சியை அடைந்து வருகின்றன. செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான வணிக மாதிரிகள், அறிவுத்திறன் தானியங்கி முறைகள், அடுத்த தலைமுறை இயந்திரங்கள் வரை - தமிழ்நாட்டு நெசவுத் தொழில் துறை எதிர்காலத்தை நம்பிக்கையுடனும் உலகளாவிய லட்சியத்துடனும் வெற்றிநடை போட்டு வரவேற்க தயாராக உள்ளது.

தமிழ்நாடு அரசு, நெசவுத் தொழிலுக்கு முழு ஆதரவு அளிக்க உறுதி பூண்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்நிகழ்வில் ஒரு முக்கிய அறிவிப்பைப் வெளியிடுமாறு எனக்கு அறிவுறுத்தியுள்ளார். மாநிலம் முழுவதிலுமிருந்து நூற்பு ஆலைகள் சார்பில், எழுப்பப்பட்ட கோரிக்கைக்கு இணங்க இந்த அறிவிப்பை இங்கே மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன்.

### சலுகை விரிவாக்கம்

தமிழ்நாடு அரசு 6 சதவிகித வட்டி மானியத் திட்ட வழிகாட்டுதல்களில் தேவையான மாற்றங்களைச் செய்யும். இதனால், நூற்புக்கு முந்தைய மற்றும் நூற்புக்கு பிந்தைய எந்திரங்களுக்கும் இச்சலுகை விரிவாக்கப்படும். மேலும், தொழிற்சாலைகள் இத்திட்டத்தின் கீழ் மூன்று முறை வரை விண்ணப்பிக்கும் உரிமை பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.புதிதாகத் தொடங்கப்பட்ட ஒருங்கிணைந்த நெசவுக் கொள்கை -2026, போட்டித்திறன், இலகுவான தொழில் செய்யும் சூழல், நிலைத்தன்மை, முதலீடுகள் ஈர்ப்பு ஆகியவற்றில் நமது கவனம் தெளிவாக இருப்பதைக் காண்பிக்கிறது.

### நெசவு வளர்ச்சி

தமிழ்நாடு அரசு நிலையான கொள்கைச் சூழல், திறமையான பணியாளர்கள், வலுவான உள்கட்டமைப்பு, சிறந்த நிர்வாகம் ஆகியவற்றை வழங்குகிறது. இவை தமிழ்நாட்டை, இந்தியாவில் நெசவு முதலீடுகளுக்கு மிகவும் ஈர்க்கும் இடமாக ஆக்கியுள்ளன. உலகளவிலான நுகர்வோர், தொழில்நுட்ப வழங்குநர்கள், முதலீட்டாள ர்கள் ஆகியோரை , உள்ளடக்கிய நெசவு வளர்ச்சியை ஒருங்கே உருவாக்க, தமிழ்நாட்டுடன் இணைந்து பணியாற்ற உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறேன்.

மீண்டும் ஒருமுறை, இந்த மாபெரும் மாநாட்டை ஏற்பாடு செய்தமைக்கு நெசவுத் துறை மற்றும் இந்தியத் தொழில்துறை சங்கத்திற்கு என் வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறேன். சர்வதேச ‘நெசவு உச்சி மாநாடு 360’ அனைத்து வெற்றிகளையும் பெற வாழ்த்துகிறேன். அனைவருக்கும் மிக்க நன்றி, வணக்கம்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்திப் பேசினார்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.1.2026) கோயம்புத்தூர் கொடிசியா வளாகத்தில் நடைபெற்ற முதலாவது சர்வதேச ஜவுளி தொழில் மாநாட்டில் விசைத்தறிகள் நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் 12 விசைத்தறியாளர்களுக்கு மானியமாக மொத்தம் 67.49 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்வில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில்பாலாஜி, மாநகராட்சி மேயர் திருமதி. கா. ரங்கநாயகி ராமச்சந்திரன், உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உள்ளனர்.


